89 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு. தில்லைநாதன்
(Sat, Sun)
9 03 - 10 30
அசேதன இரசாயனம்
12 30 - பிணைப்புகள்
ஆரம்பம்:
05-03-1988 Sat.
New Master
Institute
B M C LANE, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1-50

88 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு தில்லைநாதன்
PHYSICAL CHEMISTRY
(அவத்தைச் சமநிலை)
ஆரம்பம்: 05-03-88
Sat. 07 15 08 15
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு மாசி மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 21 (11-03-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:25

## இடம் பெயர்ந்தவர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்குடாவில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பலாம். அவர்களுக்கு தொந்தரவுகள் அல்லது குறைகள் இருப்பின் யாழ் - நகர கொமாண்டன்ட் அல்லது அரசாங்க பிரதிநிதியை அணுகலாம்.

இவ்வாறு பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படை தலைமை அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு பிரசைகள் குழுக்கள், மற்றும் பொதுநல ஸ்தாபனங்கள் ஊக்கம் அளிக்க வேண்டும் எனவும் அந்தக் குறிப்பில் கோரப்பட்டுள்ளது (ஓ)

## மோதலில் இளைஞர் பலி

கொழும்பு, மார்ச் 11

புத்தள என்னும் இடத்தில் நடந்த மோதலில் குருநாகல அய்யா என்று அழைக்கப்படும் ஓர் இளைஞர் கொல்லப்பட்டார்.

பொலீஸாருடன் ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் சிலர் மோதிய இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவு இடம் பெற்றது. (ஓ-எ)

## புதிய அமைச்சின் செயலாளர்

கொழும்பு, மார்ச் 11

பாசாணசபை அமைச்சின் செயலாளராக திரு திஸ்ஸ ஜெயகொடி நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு இந்தியாவில் இலங்கையின் உதவி தூதுவராகக் கடமையாற்றியவர். [ஓ-21]

* ராஜீவ்--பிரபா உச்சிப் பேச்சு உட்பட

# புலிகளுடன் சமரசத்துக்கு வர இந்தியாவின் பகீரத முயற்சி

## சிதம்பரம் 10 நாள் சென்னையில்

## தமிழகத் தேர்தலை முன்னிட்டு

### மத்திய அரசு மனம் மாறுகிறதா?

— சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந வித்தியாதரன்

சென்னை, மார்ச் 10

ராஜீவ் - பிரபா உச்சிப்பேச்சு நடத்துவது உட்பட, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரசத்துக்கு வருவதற்கான பகீரத முயற்சிகளில் இந்திய அரசு இறங்கியுள்ளதாக அறிய வந்துள்ளது.

இதன் பொருட்டு மத்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் சென்னையில் பத்து நாட்கள் தங்கி நிற்க ஏற்பாடாகி உள்ளது.

முன்னர் புலிகள் பிடித்து வைத்திருந்த இந்திய இராணுவ வீரர்களைத் திரும்ப ஒப்படைப்பதற்கும், 48 மணி நேர யுத்த நிறுத்தத்துக்கும் வெற்றிகரமாக ஏற்பாடு செய்த எம். கே. நாராயணன் என்ற அதிகாரியே இப்போதும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

எனினும் கடந்த எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் வரை இந்தியாவின் புதிய முயற்சிகளுக்கு, திரு. பிரபாகரனிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும்—

அவரது பதிலைத்தாம் எந்நேரமும் எதிர்பார்த்திருப்பதாகவும்—

இந்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையில் நேரடிப் பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகள் சென்னையில் வெகு வேகமாகவும், இரகசியமான முறையிலும் நடைபெற்று வருவதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சகத்தைச் (F. B யைச்) சேர்ந்த அதிகாரி திரு. எம். கே நாராயணன் பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

சிதம்பரம் சென்னையில்

இந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து அவ்வப்போது உத்தரவுகளை விடுப்பதற்காக இணையமைச்சர் திரு. ப. சிதம்பரம் சென்னையில் வந்து தங்கியிருப்பதாகவும், இந்த விடயம் குறித்து ஒரு முடிவு எடுக்கும் வரை - சுமார் பத்து நாட்கள் வரையாகிலும் அவர் சென்னையில் தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய முயற்சிகளின்படி முதலில அடையாள ரீதியாக சில ஆயுதங்களை ஒப்படைக்கும்படி விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொள்வது என்றும்—

அதன் பின்னர் ராஜீவ் —பிரபா புதுடில்லியில

(6ஆம் பக்கம் பார்க்க)



## அன்னையரின் அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாளை 12 ஆம் திகதி எமால் மேற்கொள்ளவிருக்கும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு சகல பெண்களும் அணி திரண்டு வந்து பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்த சாத்வீகப் போராட்டத்தில பங்கு கொள்வதற்கு எந்தவித அச்சமும் கொள்ளவேண்டியதில்லை.

இவ்வாறு யாழ்

(6ஆம் பக்கம் பார்க்க)

தடுப்பு முகாம்களிலுள்ள இளைஞர்களை விடுதலை செய்யக் கோரியும், மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினரின் மரணநோன்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம் அம்பாறைச் செய்தியாளர்)

## சோதனை குறைந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ் நகரப் பகுதிகளில் தற்போது இந்திய அமைதிப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

கிராமங்கள் தோறும் திடீர் திடீர் என அமுல் படுத்தப்படும் ஊரடங்குச் சட்டங்களும் தற்போது அமுலாவதில்லை. (ஓ-10)

## டிக்ஸிற் ராஜீவை சந்தித்தார்

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற், நேற்றுப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைபற்றி திரு. டிக்ஸிற் பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கடந்த ஜனவரியில் புதுடில்லி வந்து திரும்பிய பின்னர், இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி திரு. டிக்ஸிற். பிரதமரிடம் விவரித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் கே. ஸி. பந்த், வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் ஆகியோரையும் திரு. டிக்ஸிற் சந்தித்தார். (இ-எ)

## 605 தமிழ் அகதிகள்

140 குடும்பங்களைச் சேர்ந்த 605 இலங்கைத் தமிழ் அகதிகள் இன்று வெள்ளி ராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலம் தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இப்படி சென்னையில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. [ஓ-எ]

திருகோணமலை

# சிங்களவர் பாதுகாப்புக்கு ஸ்ரீலங்கா இராணுவமா?

## அனுமதிக்க முடியாது என்கிறார் ஜோசி

திருகோணமலை, மார்ச் 11

திருகோணமலையில் சிங்கள மக்களை பாதுகாக்க ஸ்ரீலங்கா பொலீஸ் படை இருக்கிறது. ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்பு அனுமதிக்க முடியாதது.

இத்தகவலை இந்தியப் படையின் புதிய தென்பிராந்திய தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ஜோசி திருகோணமலையில தமிழ் முஸ்லிம்-சிங்களப் பிரமுகர்களுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் சிங்களப் பிரமுகர்களுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தவிர ஏனைய இயக்க உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

திருமலை பிரசைகள் குழுத் தலைவர் திரு. பா. விஜயநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இலங்கையில தமிழ் மக்கள் தீராத இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்த நேரத்தில் அவர்களுக்காக போராடி உயிர்த் தியாகம் செய்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஜீ சி. ஈ. உயர்தரம்

# தோற்றத் தவறியோர் கட்டணம் இன்றி பரீட்சை எழுதலாம்

கடந்த வருடம் ஜீ சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்துவிட்டு பரீட்சை எழுத முடியாமற்போன பரீட்சார்த்திகள் இந்த வருடம் மீண்டும் அதே பரீட்சைக்கு எதுவித கட்டணமும் இன்றித் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட்டில் நடைபெற்ற ஜீ சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த போதிலும் அவ்வேளையில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் பலர் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போயிற்று.

அதிலும் மூன்றாவதும் தடவையாகவும் விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் அந்தஇறுதிச் சந்தர்ப்பத்தையே இழக்க வேண்டி ஏற்பட்டது.

## யாழ்-காங்கேசன் ரயில் பாதை திருத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன் துறை செல்வதற்கான ரயில் பாதைகள் திருத்தப்பட்டு வருகின்றன

கடந்த காலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை ரயில் பாதைகள் மிகவும் சேதமுற்று போய் இருந்தன.

ரயில் பாதைகளுக்கு போடப்பட்டிருந்த சிலிப்பர் கட்டைகளைக் கூட மக்கள் பாதுகாப்பு அரண்களுக்கு உபயோகிக்க எடுத்துச் சென்றிருந்தனர்.

இதேவேளை தற்பொழுது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை இடைக்கிடை சேவையில் ஈடுபடும் எரிபொருள் ரயிலை அடுத்த வாரம் அளவில் காங்கேசன் துறைக்கு பரீட்சார்த்த சேவையில் ஈடுபடுத்தலாம் எனத் தெரியவருகிறது. (ஓ-10)

## * இதற்கும் இலங்கையர் போட்டி

கொழும்பு, மார்ச் 11

கிருமி நாசினியை உட்கொள்வதால் இலங்கையில ஆண்டு தோறும் ஐயாயிரம் பேர் வரையில் மரணமாவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் வெளியிட்டிருக்கின்றது

கிருமிநாசனியால் மரணமாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று உலக சுகாதார ஸ்தாபனம் கணித்து உள்ளது. (ஓ-எ)

## சுபநேரம்

11-03-1988
மாசி 28
வெள்ளிக்கிழமை
சுபநேரம்: 6-23 முதல் 7-53 வரை
ராகுகாலம்: 10-53 முதல் 12-23 வரை.
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி நவமி

# கறுப்புப் பட்டி அணியும் இயக்கம் வடமராட்சி மாணவர் ஆரம்பித்தனர்

## யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை கோரி

வடமராட்சி, மார்ச் 11

வடமராட்சிப் பகுதி பாடசாலை மாணவர்கள் கறுப்புப் பட்டி அணியும் சாத்விக இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் அப்பகுதியில் உள்ள 81 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் முப்பதாயிரம் மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

இந்நடவடிக்கை தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறும் என அறிய வருகிறது

வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

அந்தக் கோரிக்கைகள் வருமாறு:-

★ இந்திய அசுர நிபந்தனையின்றி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதுடன் இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும்

★ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்

இது சம்பந்தமாக மேற்படி ஒருங்கிணைப்புக் குழு வட்டாரங்களில் இருந்து தெரிய வருவதாவது:-

★ தமிழ் ஈழத்தில் அமைதியையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டவும் —

★ கடந்த 5 மாதங்களாக நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் —

★ தமிழர்களின் உண்மையான அபிலாஷைகளுக்கு நிரந்தர முடிவு காணவும் —

★ தமிழ் மாணவர்களின் பாதிக்கப்பட்ட கல்வியை சுதந்திரமாக

(6-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



கிருமி நாசினி குடிச்சு ஐயாயிரம் பேர் செத்தது சரி. அது அடிக்கிற மரக்கறியைச் சாப்பிட்டு லட்சக்கணக்கானவை நாளாந்தம் மெதுமெதுவாய் செத்துக் கொண்டிருக்கினம்! அதை எப்படி நிப்பாட்டிறது?

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை புலோலி கிராமக்கோட்டடியில் வீடுகட்டக்கூடிய நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு" தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- மு. மாருதபிரான் "ராணி பவனம்" கிராமக்கோட்டடி, புலோலி (2005)

தெல்லிப்பளை கிழக்கு துர்க்காதேவி ஆலயத்திற்கு அண்மையாக புகையிரத நிலைய வீதி ஓரமாகப் புதிய சகல வசதிகளுமுள்ள 16 1/2 பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ஹோட்டல் ஜுவெல்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2003)

எம்மிடம் தவக்காலத்திற்கான சிலுவைப் பாதை புத்தகங்கள், திருப்பணித் தியாலம், பசாம் புத்தகம், பசாம் ஒலிப்பதிவு நாடாக்களும் சிலுவைப்பாதை ஒலிப்பதிவு நாடாக்களும், மெழுகுதிரி குவைஞ்சன் என்பனவும் விற்பனைக்குண்டு. கிடைக்குமிடம் "புனித சிந்தாத்திரை மாதா" செபமாலை ஸ்ரோர்ஸ். 140, கருவில் வீதி. கரம்பொன், ஊர்காவற்றுறை. (2010)

தெல்லிப்பளை கிழக்கு, துர்க்காதேவி ஆலயத்திற்கு அண்மையாக புகையிரத வீதி ஓரமாக புதிய சகல வசதிகளுமுள்ள 16½ பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஹோட்டல் ஜுவெல்ஸ் 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், [2003]

1 யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் 3 அறைகள் கொண்ட புதிய வீடு.
2 யாழ். அரியாலை பூகா கோவிலடிக்கு அண்மையில் 10 பரப்பு தென்னங்காணி. விபரம் J. P T. Ltd 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (1876)

வட்டுக்கோட்டை அர்கின்சன் வீதிக்கருகாமையில் "உடனே" என்னும் நெற்காணி 5 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. து. பாக்கியநாதன், சட்டத்தரணி, மாவடி, வட்டுக்கோட்டை, (1875)

Hisex, Hy - Line, Golden Comet கோழிக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 11 ஆம் திகதி வெள்ளி கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன். கொக்குவில் (1858)

ஒரு நாள் வைறலைன் கோழிக்குஞ்சுகள் 15ம் திகதி விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு கொள்க சிமாட்டி பாம்ஸ், மைலன காடு, சுன்னாகம் (1819)

C E D - V 100 E Sony Video 8 Pro புதிய ரகம் விற்பனைக்குண்டு தொடர்பு: சிவா ஸ்ரோர்ஸ், 475. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (1600)

## வசதி

தொழில் பார்க்கும் கல்வி கற்கும் பெண்களுக்கு சாப்பாட்டுடன் பாதுகாப்பான சூழலில் தங்குமிட வசதியுண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி – இல. 25, கைலாச பிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம். (1645)

## தேவை

(1) வெயிட்டர் 4 (ஆண் / பெண்) (2) காசாளர், லிகிதர் 4 (ஆண் / பெண்) (3) சமையல்காரர் 3 (4) சமையல் (உதவியாளர்) 5 Galaxy இல 30, கன்னதிட்டி றோட் யாழ்ப்பாணம். (1883)

எமது ஸ்தாபனத்திற்கு உதவி சமையல்காரரும் உதவியாளரும் உடன் தேவை. (Assistant Cook, and Helper) ஸ்ரான்லி சைனீஸ் ரெஸ்ரோறன்ற் இல 60, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1871)

ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பு பெண் லிகிதர் தேவை. நேரில் சமுகமளிக்கவும். டில்கா வோச் வேர்ஸ், (பஸ் நிலையம் முன்பாக மேல்மாடி) யாழ்ப்பாணம். (1857)

எனது மருத்துவமனைக்கு வைத்திய தாதி (பெண்) ஒருவர் தேவை சுயவிபர அறிக்கையுடன் 14-03-88 காலை 9 மணிக்கு நேரில் வரவும் Medical clinic & Surgery இல 104: College Road (Moor street) Jaffna. (1894)

பில் கிளாக் உடன் தேவை. 20 – 35 வயதுக்கு உட்பட்டவர்கள் தேவை. ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் உடன் நேரில் வரவும் டயா வோச் வேர்க்ஸ் 6. யூபிலிபஜார் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (1895)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி நவீன சந்தைக்கு அருகாமையில் 60அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட கடை ஒன்று உடன் வாடகைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பரம் இல;- 87 C/o உதயன். (1648)

## புத்தகம்

தாவரபோசன சமையல் – புஷ்பாஞ்ஜலி முருகேசபிள்ளை- திருத்திய பதிப்பு விலை ரூபா 120/- வெளிநாட்டில் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சமையல் செய்வதற்கு அரியதோர் நூல் விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1602)

## மணமகள் தேவை

வெளிநாட்டில் Master Degree நிர்வாகத் துறை) படித்துக்கொண்டிருக்கின்ற வேளாளகுல றோமன் கத்தோலிக்க 33வயதுடைய 5' 3" உயரமுள்ள மணமகனுக்கு அழகுள்ள B Sc அல்லது B. Com. பட்டதாரி தேவை: இதற்கொத்த ஆங்கில தராதரம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். லீவில் வந்துள்ள மணமகனுடன் வெளிநாடு செல்லக் கூடியவர் பட்டுமே விண்ணப்பிக்கவும். c/o 84 உதயன், 15 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1847)

## ரேனியோ

கிளின்-கட் உங்களை என்றும் வரவேற்கின்றது. ரேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம்; கிளின்-கட் இல:- 239. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## தொழிற் பயிற்சி கல்வி

Radio T V Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார், மெக்கானிசம், வைண்டிங் Spoken English Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
Vispa Engineering And Hall 328, Navalar Road, Jaffna (1840)

## உணவு

Wel comes you to Hotel d Galaxy (Unavagam) (சைவ உணவகம்) நகரின் மத்தியிலே சுவையான மதிய, இரவு உணவு வகைகளை அருந்த நாடுங்கள்—Galaxy No.30 கன்னதிட்டிறோட் (சிவன்கோயில்முன்பாக) யாழ்ப்பாணம். We Look after you Better

## இராமானுஜம் வந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 11
இராமானுஜம் கப்பல் மூலம் 245 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தலைமன்னார் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடந்தகால அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்டு மன்னார், தலைமன்னார் பகுதிகளில் இருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள்.

ஐந்து வருடங்களின் பின்னர் முதல்தடவையாக இராமானுஜம் கப்பல் தலைமன்னார் துறைமுகத்தை வந்தடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-10)

THANK YOU
ST. JUGED
for favour granted
RANI

## யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கம்

மேற்படி சங்கத்திற்கு அங்கத்தவராகச் சேர விரும்புபவர்கள் 10/ வுடன் 25-03-88 க்கு முன்பாக டாக்டர் T. வர்ணலிங்கம் இல. 3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

Dr. T. வர்ணலிங்கம்
செயலாளர்
(2002)

கட்டு வேலைகள் செய்வோர் கட்டிடப் பொருட்கள் (மர உற்பத்தி உட்பட)
உற்பத்தி செய்வோர் விநியோகிப்போர்

## கவனத்திற்கு

அகில உலக கெயர் ஸ்தாபனம் (Care International) யாழ். மாவட்டத்தில் வீடு கட்டல் புனரமைப்புத் தொடர்பாக கீழ் வரும் முகவரியில் மேற் குறிப்பிட்டோரைத் தாங்கள் செய்யும் வேலை, உற்பத்தி பொருட்கள் தற்போதைய, 1982ன், எதிர்பார்க்கும் (முன்னேற்றமான சூழ் நிலையில்) வேலை, உற்பத்தி என்பனவற்றின் அளவு பெறுமானம் ஆகிய விபரங்களைப் பதிவு செய்யுமாறு கோருகிறது. விவரங்கள் கைமூலமோ, தபால் மூலமோ அனுப்பப்படலாம்.

பிரதிப் பணிப்பாளர் (வடக்கு)
**அகில உலக கெயர் ஸ்தாபனம்**
**3, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

சுன்னாகம் பல நோ கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## நல்லெண்ணெய் விநியோகத்திற்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு நல்லெண்ணெய்விநியோகம் செய்வதற்கு உற்பத்தி செய்வோரிடமிருந்து கூறுவிலைகள் கோரப் படுகின்றன.

கூறுவிலைகளைக் குறிப்பிடும் பொழுது ஒரு போத்தல் எண்ணெய் போத்தலுடன் விநியோகம் செய்யக்கூடிய விலையையும் போத்தலில்லாது விநியோகிக்கக் கூடிய விலையையும் தனித் தனியாக குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் 18 – 03 – 88 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

**பொது முகாமையாளர்**

ST. JOHN'S COLLEGE. JAFFNA.
Old Boys Association

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**12-03-88**

காலை 7-00 மணி நற்கருணை ஆராதனை
காலை 9-00 வருடாந்தப் பொதுக்கூட்டம்

தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்வரும் நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

காலை ஆகாரம்
மதிய உணவு
அதிபரின் தேனீர் விருந்து
கிரிக்கெட் உதைபந்தாட்டப் போட்டிகள்
(உணவுக்குப் பணம் செலுத்தியோர் கூட்டத்தில் அதனை மீளப்பெற்றுக்கொள்ளலாம்.

(2009) காரியதரிசி

# THANKING

Grateful thanks to Almighty God, sacred Heart of Jesus & St. Jude for Favour Granted.

May the Scared Heard of Jesus be adored, Glorified loved and Preserved, throughout the World now and for ever sacred Heart of Jesus Pray for us.

Thank you Jesus Thank you St. Jude (Say ths prayer 9 times a day for 9 days. It has never been known to fail) (1818)

## விற்பனைக்கு

காங்கேசன்துறை சீமெந்து, தொகையாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையான பைக்கற்றுக்களை கொள்முதல் செய்பவர்களுக்கு இலவசமாக ரான்ஸ்போட் செய்துதரப்படும்.

**நிப்பொன் ஹாட்வெயர்**
2G, ஸ்ரான்லி வீதி.
கஸ்தூரியார் — ஸ்ரான்லி வீதி.
**யாழ்ப்பாணம்**

வாடிக்கையாளர்களே!
வியாபாரிகளே!

1 நல்ல விலையில் கொப்பறா கொள்வனவு செய்யப்படும்,
2. நன்றாக காய்ந்த தேங்காய்ப் பால் எடுத்த "பூ" வையும் சேகரித்து பணமாக்குங்கள்
3. கைவசமுள்ள "கொப்பறா பூ" ஆகியவற்றை உடன் கொடுத்து அதன் பெறுமதியை பெற்றுக் கொள்ளுங்கள்.
4. NO. 1 தேங்காய் எண்ணெய்க்கு விஜயம் செய்யுங்கள்.
5. குறைந்த சலாரில் எண்ணெய் வடித்துப் பெற்றுக் கொள்ள வேண்டுமா, உடன் தொடர் கொள்ளுங்கள்.

மல்ரி ஓயில் இன்டஸ்றீஸ் லிமிடெட்
(OIL MILLERS)
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்புறம்)

## POST OF FARM MANAGER

மருதனமடம், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்திற்கு பண்ணை முகாமையாளர் (Resident Farm Manager) உடன் தேவை.

இந்நிறுவனத்தின் பண்ணையில் உள்ள விடுதியில் தங்கியிருக்க வேண்டும். இலவச விடுதி வசதி அளிக்கப்படும்.

**தகமை :**
விவசாய டிப்ளோமா (குண்டசாலை) அல்லது அதற்குச் சமனான தராதரம்.

**சம்பளம் :**
அனுபவத்தைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்

**விண்ணப்ப முடிவு திகதி : 21-03-88**

**Jaffna College**
**Institute of Agriculture,**
MARUTHANAMADAM,
CHUNNAKAM.
Principal

14 - 03 - 88-இல் நடைபெற உள்ள யாழ். மாவட்ட பயிற்சிப் பரீட்சை நேர அட்டவணை மற்றும் விபரங்கள் சனிக்கிழமை சஞ்சீவியில் வெளியாகும்.

**"விக்ன"**
**டியூசன் சென்ரர்**
**52, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# WANTED

**Nurses with operating theatre and Maternity experience call personally**
**CENTRAL NURSING HOME**
**THIRUNELVELY.** (1646)

## வெளிவந்துவிட்டது

பல மாத இடைவெளிக்குப் பின்
ஆசிரியர்: காமினி நவரெத்னவின்
**சற்றடே றிவியூ**
**SATURDAY REVIEW**
தை மாத இதழாக வெளிவந்துள்ளது.
எல்லாப் பிரபல பத்திரிகை விற்பனையாளரிடமும் கிடைக்கும்.
அகதிகள் அன்பளிப்பு விலை: ரூபா 10/-

## விற்பனைக்கு

35 ஸ்ரீ 450 (Toyota Hiace)
குறித்த வாகனத்திற்கான விண்ணப்பங்கள் 18 - 03 - 88 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விவரங்களுக்கு:-
**த. பிறுன்ஸ் கொம்பனி லிமிட்டட்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
(1899)

புனித யோன் பொஸ்கோ வித்தியாலய
ஓய்வுபெற்ற அதிபர்
சங்க அருட்செல்வி
**ஸ்ரனிஸ்லொஸ்மேரி ஏ சி**
அவர்களுக்கு
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நடாத்தும்
**சேவைநலன் பாராட்டு விழா**

காலம்: 12 - 03 - 1988 சனி
பி. ப. 3 மணி
இடம்: வித்தியாலய அரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(1898)

**வின்ஸர்** 10-30, 2-03, 4 30
100 ஸ்கோப் திரையில்
ஜேம்ஸ் கோல்பேன்
நடித்த
**The Great Escape**
தீரவீரக் கைதிகள் சிறையில் இருந்து தப்பியோடிய, உண்மையாக நடைபெற்ற சம்பவத்தை உன்னதமாகச் சித்தரிக்கும் உயர்ந்த ஓவியம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஐ. கிருபாகரன்**
(வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிபதி)

உறுதியின் உறைவிடமே!
உத்தமர்க்கு உறுதுணையே!
அன்பால் பல உள்ளங்களை வென்றீர்
ஆருத்துயரில் எமை எல்லாம் ஆழ்த்திச் சென்றீர்

இரு ஆண்டுகள் கடந்திட்டாலும்
இருயுகங்கள் சென்றிட்டாலும் — எம்
நெஞ்சமது தாங்குமா — இனி
நேர்மையது நிலைக்குமா?
உமது ஆத்மா இறைவன் திருவடி
நீழல் -அடைந்து சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, உற்றார், உறவினர்.

பன்னாலை,
தெல்லிப்பழை. (1901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

நமது உடல் உழைப்பை அறிவுடன் செய்தால் போதும் அறிவு வளர்ச்சி நம்முடன் இணைந்து வளரும். அறிவு பெறச் சிறந்த வழி இது.

— காந்திஜி

உதயன்
உண்மை - திருத்தமை - நடுநிலைமை
இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
11.03.1988 த.பெ.இல:-23

# நல்ல செய்தி; செயலாக வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மூடப்படமாட்டாது என்ற நல்ல செய்தியை உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்ரான்லி கல்பகே வெளியிட்டுள்ளார். இது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி வடக்கு, கிழக்கு வாழ் மாணவர், பெற்றோர் எல்லோருக்குமே மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

தமிழ் மாணவர்கள் கொழும்பு, பேராதனை ஆகிய இடங்களில் பல்கலைக்கழககல்வி-உயர்கல்வி-பெறுவதில் உள்ள நடைமுறைக் கஷ்டங்கள் பல கடந்த கால அனுபவங்கள் பல வருடகால முயற்சி, வற்புறுத்தல் ஆகியவற்றின் விளைவாக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் பல்கலைக்கழகங்களை நிறுவும் வாய்ப்பு உண்டானது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டது.

மருத்துவ பீடத்தில் பணிபுரிந்த பல பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் நாட்டை விட்டு வெளியே சென்றதால் போதனைகளை நடத்துவது கஷ்டம் என்ற நிலை உருவாகியுள்ளது.

இது பெரும் கவலைக்குரிய விடயமாகும். தமிழ்ப் பகுதிகள் இப்போதுள்ள கொதிக்கும் நிலையில், வெளிநாடுகளில் மிக இலகுவில் வேலை வாய்ப்புப் பெறக்கூடிய டாக்டர்கள், பொறியியலாளர்கள், மற்றும் கல்விமான்கள் போன்ற Professionals நாட்டை விட்டு வெளியே செல்ல விரும்புவது இயல்பு.

கடந்த வருட இறுதியில் நடந்த சம்பவங்களால் எங்கு ஓடித் தப்பலாம் என்று ஏங்கியவர் பலர் உண்டு என்பது உண்மை. அந்த அளவுக்கு அப்போது மனித வாழ்க்கை ஒரு ஓரத்துக்கே ஒடிப்போயிருந்தது.

அதனையும் சகித்துக் கொண்டு தங்கள் மண்ணுக்குத் தமது சேவையை வழங்குவதற்காக இங்கு தங்கியிருந்து பணிபுரியும் கல்விமான்களையும் மற்றவர்களையும் பாராட்ட வேண்டும்.

இவ்விதம் மண் பற்றும், தமது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பமும் உடையவர்கள் மேலும் பலர் இல்லாமல் இல்லை. அவர்களுக்கு அதிக வேதனம் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தாவது அவர்களது சேவையைப் பெற முயற்சிக்க வேண்டும்.

இது விடயத்தில் அரசாங்கம், பல்கலைக்கழக நிர்வாகம், கல்விமான்கள் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இதில் சம்பந்தப்பட்ட சகலரும், மற்றும் மக்கள் நலன் விரும்பிகளும் தமது தனிப்பட்ட சுயநலத்துக்கும், சுயமுன்னேற்றத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் பொதுமக்கள் சேவை, தாயகப்பற்று, மண்ணுக்குரிய சேவை என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

சென்ற வருட அசம்பாவிதங்களுக்கு முன்னரே வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு சிறப்புற பணியாற்றுவோர் விரும்பும் பட்சத்தில், இங்கு அவர்களுக்கு வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

யாழ். மருத்துவ பீடம் மூடப்படமாட்டாது என்ற நல்ல செய்தி செயலுருப் பெற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

## ஜனாதிபதிக்கு உள்ள
# நீதிமன்ற பாதுகாப்பு சலுகை நீக்கப்படும்
### தெரிவுக்குழு சிபார்சு

கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி இதுவரை காலமும் அனுபவித்து வந்த 'நீதிமன்றப் பாதுகாப்புச் சலுகை'யை நீக்கவேண்டும் என்று நாடாளுமன்றத்தெரிவுக் குழு சிபார்சு செய்திருக்கிறது.

பிரதமர் தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழு சிபார்சு செய்திருக்கிறது.

தற்போது இருக்கும் தேர்தல் சட்டப்படி ஜனாதிபதியைத் தேர்தல் வழக்குகளில் பிரதிவாதியாக அழைக்கமுடியாது.

இனிமேல் ஜனாதிபதியையும் தேர்தல் வழக்குகளில் பிரதிவாதியாக அழைக்க வகைசெய்யும் விதத்தில் தேர்தல் சட்டம் திருத்தி அமைக்கப்படும். (இ-எ)

## சந்திரிக்கா புதிய தலைவர்

திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவைப் புதிய தலைவராக இலங்கை மக்கள் கட்சி தெரிவு செய்தது.

கடந்த ஞாயிறு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடந்தது.

அப்போது திருமதி குமாரணதுங்கா ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். [இ-எ]

# சீன எதிர்ப்பாளர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்
## பஞ்சன்லாமா தகவல்

பீகிங், மார்ச் 10

சீன எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்ட திபெத்தியர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

சீன அரசின் நெருங்கிய ஆதரவாளரான பஞ்சன்லாமா முன் கண்டவாறு தெரிவித்தார்.

கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாக சீன அரசு அறிவித்து உள்ளது மேலதிக துருப்புக்களை சீன அரசு, திபெத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

லாசாவில் இருந்து கிடைத்த சுபேச்சையான தகவலின்படி, பாதுகாப்புப் படையினர் பௌத்த தலம் ஒன்றினுள் புகுந்து சுட்டனர் என்றும் அச்சம்பவத்தில் 16 பிக்குகள் உயிரிழந்தனர் என்றும் தெரிய வருகிறது (எ)

## மூப்பனார் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 11

பிரதமர் ராஜீவ் காந்தி பதவி விலக வேண்டும் என்று கோரி இம்மாதம் 15 ஆம் திகதி நடத்தப் படவுள்ள பந்த் முறியடிக்கப்பட வேண்டும்.

இப்படி தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க் கட்சிகளின் இந்த பந்த் தமிழக மக்களினால் ஒரு சவாலாகக் கருதப்பட வேண்டும் என்று திரு மூப்பனார் வலியுறுத்தினார். [இ-எ]

**வெளி உலகில்**

# தமிழ் நாட்டில் ஜனாதிபதி ஆட்சியை நாடாளுமன்றம் அங்கீகரித்தது

புதுடில்லி மார்ச். 10

தமிழ் நாடு சட்டசபை கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டதை இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளும் ஏற்றுக் கொண்டன

ராஜ்யசபாவில் நேற்று ஜனாதிபதி ஆட்சியை அங்கீகரிக்கும் பிரேரணையை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றியது

விவாதத்துக்குப் பதிலளித்து இணை அமைச்சர் ப. சிதம்பரம் பேசினார்.

அ.தி.மு.க. பிளவுபடாமல் இருக்க என்ன செய்யவேண்டுமோ அத்தனையையும் இந்திரா காங்கிரஸ் மேற்கொண்டது.

அ.தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவு தமிழகத்தில் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கியதாக முடிந்தது.

ஜானகி இராமச்சந்திரனின் ஆட்சியை ஆளுநர் பதவியில் அமர்த்தியது, ஆளுநர் சுதந்திரமாக இயங்கியதையே எடுத்துக் காட்டுகின்றது

இப்படி திரு. சிதம்பரம் சொன்னார்.

ஜானகி அணி அ.தி.மு.க எம்பிக்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (எ)

## வருட இறுதியில் பொதுத் தேர்தல்
### ஜே. ஆரின் சகோதரர் ஜெனிவாவில் அறிவிப்பு

ஜெனிவா, மார்ச் 10

இந்த ஆண்டின் இறுதியில் பொதுத் தேர்தலும் அடுத்த ஆண்டு பெப்ரவரிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலும் நடத்தப்படும்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ நா மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் இலங்கை அரசுப் பிரதிநிதி டாக்டர் எச். டபிள்யு ஜெயவர்த்தன முன்கண்டவாறு தெரிவித்தார்

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சகோதரரான டாக்டர் ஜெயவர்த்தன அங்கு மேலும் சொன்னதாவது; இந்திய, இலங்கை நாடுகளுக்கு இடையேயான உறவு பாரம்பரியமானது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் அந்த ஒப்பந்தத்தை உறவைமேலும் வலுப்படுத்துகின்றது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித, அடிப்படை உரிமைகளை பேண இலங்கை அரசு உறுதி கொண்டிருக்கின்றது.

வன்செயல்களைக் கைவிட்டவர்களை தேசிய நீரோட்டத்தில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் ஓர் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது இதற்கு உதாரணமாகும்

இப்படி டாக்டர்ஜெயவர்த்தன தெரிவித்தார். [அ-எ]

## தமிழ்நாடு வாக்காளர் பட்டியல்

தமிழ்நாடு வாக்காளர் பட்டியல் மே மாதம் 6 ஆம் திகதி வெளியிடப்படும்.

இதனிடையில் தமிழ் நாடு அரசின் சிறப்பு ஆலோசகர் சித்து. சட்ட சபைத் தேர்தல் குறித்து புதுடில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையாளருடன் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றார்.

இத் தகவல்களை தமிழ் நாடு ஆளுநர் டாக்டர் பி ஸி அலெக்ஸாண்டர் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

தேர்தல் திகதியை நிர்ணயிப்பது தேர்தல் ஆணையாளரின் கடமை என்றும் டாக்டர். அலெக்ஸாண்டர் சொன்னார். [இ-எ]

## சோவியத் யூனியனில்
# ஆர்மெனிய, அஸர்பைஜான் இனங்களுக்கு இடையேயான மோதல் பற்றி உயர்மட்ட விசாரணை

ஆர்மெனிய, அஸர்பைஜான் இனங்களுக்கு இடையேயான மோதல்கள் குறித்து உயர் மட்ட விசாரணை ஒன்றுக்கு சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் உத்தரவிட்டார்.

ஆர்மெனிய மாநிலம், அஸர்பைஜான் மாநிலம் சோவியத் யூனியனின் தென்பகுதியில் உள்ளன

இரண்டு மாநிலங்களில் வாழும் மக்களிடையே கடந்த வாரம் இடம்பெற்ற மோதலில் 32 பேர் வரை உயிரிழந்தனர்

இரவு நேர ஊரடங்கு இரண்டு மாநிலங்களிலும் அமுல்நடத்தப்பட்டு வருகின்றது

கிரெம்ளினில் கடந்த புதன் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு கூடி இது பற்றி ஆராய்ந்தது.

192? ஆம் ஆண்டில் அஸர்பைஜான் மாநிலத்துடன் இணைக்கப்பட்ட கரபாக் பிரதேசத்தை ஆர்மெனியா மநிலத்துடன் இணைய வேண்டும் என்றே ஆர்மெனியா மக்கள் கிளர்ச்சி நடத்தினர்.

இதைத் தொடர்ந்து இரண்டு மாநிலங்களிலும் வன் செயல்கள் இடம்பெற்றன.

## சோவியத் விமானக் கடத்தல் முயற்சி முறியடிப்பு

சோவியத் யூனியனில் கடந்த புதன் கிழமை பயணிகள் விமானக் கடத்தல் சம்பவம் ஒன்றை பாதுகாப்பு அதிகாரிகள் முறியடித்தனர்.

உள்ளூர்ப் பயண விமானம் ஒன்றே கடத்தப்பட விருந்தது.

ஆயுதம் தரித்தவர்கள் குழு ஒன்று இம்முயற்சியில ஈடுபட்டது

சோவியத் பொலிஸாரின் எதிர்த் தாக்குதல் அவர்களை நிலை குலைய வைத்தது

இச்சம்பவத்தில் உயிரிழப்புக்களும் ஏற்பட்டன என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது விவரம் எதையும் 'டாஸ்' வெளியிடவில்லை. (எ)

# பிரதமரைப் பதவி விலகக் கோரி புதுடில்லியில் பேரணி

புதுடில்லி. மார்ச். 10

பிரதமர் ராஜீவ் காந்தியைப் பதவி விலகக் கோரி பேரணி ஒன்று புதன்கிழமை புதுடில்லியில் நடத்தப்பட்டது

லோக்தள் (பி) பிரிவும் பாரதிய ஜனதாகட்சியும் சேர்ந்த இந்த அணியை நடத்தியது.

சுமார் 5 இலட்சம்பேர் பேரணியில் கலந்து கொண்டார்கள் என்று அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் ரோ, சுமார் ஒரு இலட்சப் பேர் வரையில் தான் பேரணியில் கலந்து கொண்டனர் என்று தெரிவித்தனர்.

ஹரியானா முதலமைச்சர் தேவிலல், ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ், கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே, பாரதிய ஜனதாத் தலைவர்கள் அத்வானி, வாஜ்பாய், முன்னாள் நிதி அமைச்சர் வி. பி சிங் ஆகியோர் பேரணியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர் (எ)

## கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்

முஸ்லிம் தீவிரவாதக் குழு ஒன்றினால் கடத்தப்பட்ட பிடி.யஷ்நிவாரண அதிகாரிகள் இருவர் விடுவிக்கப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளே இவர்கள்

# எகிப்து இஸ்லாமிய நாடாக வேண்டுமென தீவிரவாதிகள் கிளர்ச்சி

கெய்ரோ. மார்ச் 10

எகிப்து, இஸ்லாமிய நாடாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என்று கோரும் முஸ்லிம் அடிப்படை தீவிரவாத இயக்கம் வலுப்பெற்று வருகின்றது.

இந்த இயக்கத்தினர், கெய்ரோவின் தென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகத்தினுள் புகுந்து கடந்த செவ்வாய்க் கிழமை கலவரம் நடத்தினர்.

பல்கலைக்கழகத்தில் அச்சமயம் இசை விழா ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது உள்ளே புகுந்த தீவிரவாதிகள் உடைமைகளைச் சேதப்படுத்தினர்.

பொலிஸார் 69 தீவிரவாதிகளை கைது செய்தனர்.

பொலிஸார் தப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் தெரிவித்தன (எ)

## பிலிப்பீன்ஸில் இராணுவ வீரர் வெறியாட்டம்

மணிலா, மார்ச் 10

பிலிப்பீன்ஸில் இராணுவச் சிப்பாய் ஒருவர் வெறிகொண்டு சுட்டதில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

ஆறுபேர் காயமடைந்தனர்.

## ஹோமகம
# இடைத்தேர்தலை நடத்த அரசு தயங்குவது ஏன்?
### இராணுவமுகாம் அருகில் இருப்பதனாலா?

கொழும்பு, மார்ச்11

பனாகொட இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள ஹோமகமத் தொகுதியின் இடைத் தேர்தலை நடத்த அரசு ஏன் அஞ்சவேண்டும்?

இப்படிக் கேட்டார், முன்னாள் சபாநாயகரும் ஹோமகம சுதந்திரக் கட்சி வேட்பாளருமான திரு ஸ்டான்லி திலகரத்தின.

பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

இடைத் தேர்தலை ஒத்திவைக்கும் முன்னர் எதிர்க்கட்சிகளுடன் அரசு ஆலோசனை நடத்தி இருக்க வேண்டும்.

சுதந்திரக் கட்சி ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டது.

இடைத் தேர்தலை அடுத்த மாதம் முதல் வாரத்தினுள் அரசு நடத்த வேண்டும். அது வரை எமது பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும்.

அரசு எம்மைக் கிள்ள முயற்சித்தால் நாம் அதற்குப்பதிலடிகொடுப்போம்.

எல்லா அரசியல் கொலைகளுக்கும் ஜே வி. பி. யைக் குற்றஞ் சாட்டக் கூடாது.

தடைநீக்கப்பட்டு சகல அரசியல் கட்சிகளுடனும் சமதையாக ஜே வி பியினர் வைக்கப்படவேண்டும்.

இப்படி திரு. திலகரத்தின சொன்னார். (இ-எ)



**பொய்யாமொழி**

குறள்:
குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

பொருள்:
... விளக்கு, அவனுடைய சோம்பல் ... மாசு ...

## செய்திக் கொத்து

### வானொலியில்

எதிர் வரும் 20 ஆம் திகதி வரும் நல்லைத் தேரடிச் செல்லப்பாச் சுவாமிகளின் வருடாந்த குருபூசை தினத்தை முன்னிட்டு நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.15க்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் நடைபெறும் "ஞானக் கோவை" நிகழ்ச்சியில் தேரடிச் செல்லப்பா சுவாமிகள் பற்றிய அதிஅற்புத வரலாறு ஒலிச் சித்திரமாக இடம் பெறுகிறது.

இதனை திரு. எஸ். சண்முகரத்தினம் தயாரித்திருக்கின்றார். வண்ணைக் கவிஞர் எஸ். கே. யோகநாதனும் கலந்து கொள்கிறார்.

### விழா முற்பணம்

மாவிட்டபுரம், மார்ச்11

நெல்லியடி கோட்டக் கல்வி பிரிவிலுள்ள ஆசிரியர்களுக்கான விழா முற்பணம் விரைவில் கிடைக்கும்.

விழாமுற்பணத்துக்குத் தேவையான நிதி தொடர்பாக கோட்டக் கல்வி அதிகாரியை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கணக்காளருடன் தொடர்புகொள்ளுமாறு பிரதம கல்வி அதிகாரி திரு கே. சோமசுந்தரம் பணித்துள்ளார். (இ-90)

### சிரமதானம் மூலம் ஆலயம் திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 11

அண்மைக்கால அசம்பாவிதங்களினால் சேதத்திற்குள்ளான நாயன்மார்கட்டு கொட்டுக் கிணற்றடி விநாயகர் ஆலயத்தை சிரமதான மூலம் திருத்திஅமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

இந்த ஆலயத்தை புனர் நிர்மாணம் செய்வதற்கு லட்சக்கணக்கான ரூபா தேவையாக இருந்த போதிலும் அடியார்கள் சிரமதானம் மூலம் இத் திருப்பணியை செய்ய முன் வந்ததை அப்பகுதியின் சைவ சமய அபிவிருத்திக் கழகம் பாராட்டியுள்ளது.

பேலும் கடந்த 6.3.88 இல் நடைபெற்ற முதற் கட்ட சிரமதானப் பணியில் கலந்து கொண்டவர்களுக்கும் தமது நன்றியையும் மேற்படி கழகம் தெரிவித்துக் கொண்டுள்ளது. (ந-9)

### கணபதிப்பிள்ளை நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பிரபல எழுத்தாளரும், நாடகக் கலைஞருமான அமரர் சின்னப்பா கணபதிப்பிள்ளையின் 16 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று ஆகும்.

### நுண்கலைப் பாடசாலை

யாழ்ப்பாணம், மார்ச்11

திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள கிராம கிருஷ்ணாலயத்தில் நுண்கலைப் பாடசாலை தவத்திரு.மகாதேவா சுவாமியால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையில் சங்கீத [வாய்ப்பாட்டு] வகுப்புகள் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்று வருகின்றன. (இ-எ)

### உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு. மார்ச் 11

விசேட சேவை அதிகாரிகளைக் கிராமசேவையாளர்களாக நியமித்து அவர்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இதற்காக குற்றவியல் சட்டம் திருத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. பொதுச்சபை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விசேட சேவை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரங்களைப் பெற இச் சட்டத் திருத்தம் வழி செய்யும்.


பொறளை வாசியான திரு கே. விலதுங்க என்பவர் இம்மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உதயன்



11 - 03 - 1988 வெள்ளிக்கிழமை

## புலிகளுடன் சமரசத்துக்கு. . . .

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

சந்தித்து மனந்திறந்து பேசுவதற்கு ஏற்பாடு செய்வது என்றும் இந்தியத் தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம்.

இந்த யோசனைக்கு புலிகள் இணங்கினால், அத்தகைய பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உடன்பாடு குறித்து ராஜீவ்-பிரபா இருவரும் சென்னையில் பொதுக் கூட்டம் ஒன்றில் ஒன்றாகத் தோன்றி அதனை அறிவிப்பது என்றும் இந்தியத் தரப்பில் மேலும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மனம் நிறந்த பேச்சு**

சென்னையில் உள்ள புலிகள் இயக்கப் பிரமுகர்களுடன் திரு எம். கே. நாராயணன் இந்த விடயம் குறித்து மனந்திறந்து பேசியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட 18 இந்திய இராணுவ வீரர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளையும்—

இந்தியத் தரப்பில் 48 மணிநேர யுத்த நிறுத்த அறிவிப்பை விடுக்கச் செய்வதற்கும் திரு. எம். கே. நாராயணனே முன்னின்று செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரபாவின் சபதம்**

திரு. பிரபாகரன் சென்னையை விட்டுக் கடைசியாகப் புறப்பட்ட போது இந்த மண்ணில் மீண்டும் காலடி எடுத்து வைக்கமாட்டேன் எனச் சபதம் இட்டுச் சென்றுள்ளதால் பேச்சுவார்த்தைக்காகவோ அல்லது ஆயுத ஒப்படைப்புக்காகவோ அவர் இந்தியாவுக்கு மீண்டும் வரமாட்டார் என சென்னை அரசியல் செய்யாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் குறித்து தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றன.

தமிழக சட்டசபைத் தேர்தலில் வேறு கட்சிகளுடன் கூட்டு வைக்காமல் தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றுவரும் இந்திரா காங்கிரஸ் கட்சி, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியைத் தவிர்த்துக்கொள்வதற்கும்–

ஒப்பந்தத்திற்கு பிரபாவை இணங்கச்செய்து அதனை வெற்றிகரமான ஓர் ஒப்பந்தமாக வெளிக்காட்டி அதன் மூலம் தமிழக மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவுமே புலிகளுடன் சமரச முயற்சிக்கு இந்திய மத்திய அரசு தற்போது முயன்று வருகிறது என சென்னை அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (உ)

## இரண்டாவது நினைவஞ்சலி

**11 - 3 - 86 அன்று யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தோழர்களுக்கும் மக்களுக்கும் எமது அஞ்சலிகள்!**



| i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|
| தோழர் கிராத் | தோழர் காளி | தோழர் தாஸ் | தோழர் பீற்றர் | தோழர் மோகன் |

- மக்களே எங்கள் இதயங்கள் மறக்காத இந்த மனிதர்கள் ஈழ மக்களின் மனித உரிமையை நிலைநாட்டப் புறப்பட்டவர்கள்.
- வரலாறு தம்மீது சுமத்திய சமூகப் பொறுப்பை உணர்ந்து தங்கள் கரங்களில் ஆயுதம் ஏந்தியவர்கள்.
- எங்கள் தாய் நாட்டின் விலங்கை உடைத்தெறியப் புறப்பட்ட இவர்களை வெறும் துப்பாக்கிகளை மட்டும் தூக்கிய சிலர் சுடித்துக் குதறினரே.

இக்கொடிய சம்பவத்தை எதிர்க்கப் போர் தொடுத்து மரணித்த மக்களுக்கும், உடல்கள் அழிக்கப்பட்டாலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும் எங்கள் இனிய தோழர்களுக்கும் அஞ்சலிகள்!!

''அராஜகம் வென்றதாக வரலாறு இல்லை.''

(1897) உங்கள் பிரிவால் வாடும் தோழர்கள்

## கறுப்புப்பட்டி..-

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வும் தடையின்றியும் தொடர்வதற்கான நிலைமைகளை உருவாக்கவும் —

(1) இந்திய அரசு நிபந்தனையின்றி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதுடன் இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும்.

(2) விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் — என்பதே கறுப்புப் பட்டி இயக்கத்தின் நோக்கமாகும்.

(ஒ 160)

## அன்னையரின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னையர் முன்னணியினர் விடுத்துள்ள வெளியீடு ஒன்றில் தெரிவித்துள்ளனர்

இந்த ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நாளை 12 ஆம் திகதி காலை 8 30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறும். (ஒ)

## சிங்களவர்....,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவர்கள் விடுதலைப் புலிகள். இந்தியப் படை வருகை தருவதற்கும் காரணம் அவர்கள் தான்.

இந் நிலையில் அவர்கள் பங்குபற்றாத எந்தவொரு தீர்வும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என சொல்வதற்கில்லை.

இந்திய அமைதிப் படையினர் வருவதற்கு முன்பு தமிழர் அனுபவித்த துன்பங்களை பின்பும் அனுபவிக்கிறார்கள். அன்று உயிருக்கு உத்தரவாதம் இல்லாத துன்பம் அனுபவித்தனர் இன்று உயிர் இழக்காத துன்பம் அனுபவிக்கிறார்கள். என்றார்.

சிங்களப் பிரமுகர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

''தமிழர்களை பாதுகாக்க இந்திபப்படை இருப்பதுபோல் எமக்குபாதுகாப்பு வழங்க ஸ்ரீலங்கா இராணுவம் தேவை'' என்றனர். (ஒ-21)

## ●நீத்தார் பட்டியல்●

### யோன்கென்றி

மானிப்பாயை சேர்ந்த யோன்கென்றி (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) 9-3-88 அன்று காலமாகிவிட்டார். காலஞ்சென்ற ஜோன (சின்னட்டி) தம்பதிகளின் அன்பு மகனும் பிஸ்லின் தவமணியின் கணவரும் ஜெயகுலராஜா (M. P. C. S, மானிப்பாய்) அலஸ்லின் மகிழ்ராஜா(டென்மார்க்)ஸ்ரலின் ஜெயராஜா, வின்சன மனோருஜ் (C. T. B கோண்டாவில்) செல்வி கில்லா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் தகப்பனும் ஜஸ்மின் இராஜேஸ்வரியின் மாமனும், ஜெலின்ஸ், கொலின், கொலின்ஸ்ரன் ஆகியோரின் பேரனும், J C சாமுவேல், (இளைப்பாறிய தலைமை ஆசிரியரும், சமாதான நீதவானும் J. R. அல்பேர்ட் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) J. S. செல்லத்துரை (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகஸ்தர்) J S. ஜேசுதாசன் (புகையிரத நிலைய அதிபர், கொடிகாமம்) R. செல்வராணி, S. இராசமலர் ஆகியோரின் சகோதரரும் A. இராஜேந்திரம் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகஸ்தர்) K. சிவசாமி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் மானிப்பாய் சேமக்காலையில 12-3 88 (சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் நடைபெறும் இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்.

தகவல்: H. ஜெயகுலராஜா

1907

### சங்கரப்பிள்ளை முருகேசு

காரைநகரைப் பிறப்பிடமாகக்கொண்டு கந்தர்மடத்தை வசிடபிடமாகக் கொண்ட முல்லுள் அரசாங்க பாடசாலைகளின் அதிபராகக் கடமையாற்றியவருமான சங்கரப்பிள்ளை முருகேசு7-3-88ல் காலமாகிவிட்டார். அவர் மனோன்மணியின் அன்புக் கணவரும் சிவகுமாரன், தெய்வகுமாரன், மகேஸ்வரி, சூரியகுமாரன், வாசுகியம்மை. நந்தகுமாரன், ஆகியோரின் தகப்பனும், Dr. பாலசுப்பிரமணியம். சித்திராவதி, சுகுணாதேவி, Dr. இரகுநாதன், வின்டா ஆகியோரின் மாமனுமாவார். அவரின் ஈமச்சடங்குகள் 8-3-88ல் நடைபெற்றன.

உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி

73/1, பலாலி வீதி, கந்தர்மடம்

(1896)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24-12-1924

மறைவு: 24 2 1984

அமரர்

**திரு. நா. அருமைநாயகம் அவர்கள்**

(முன்னாள் இளைப்பாறிய ஆசிரியரும், சமாதான நீதிவானும், ஆத்மஜோதி அங்கத்தவர் உரிமையாளரும்)

**திதி: 11-3-1988**

அன்பிற்கோர் இருப்பிடமாய் பண்பிற்கோர் பிறப்பிடமாய் எம்மையெல்லாம் ஆதரித்து வழி நடத்தி மகிழ்வித்துச் சென்று ஆறாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்து இன்றுடன் நான்காண்டுகள் ஆகின்றன. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், பேத்தி.
மற்றும் உற்றார் உறவினர்கள்.

''குருபவனம்''
கண்டி ரோட்
சாவகச்சேரி.

[1892]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



க. பரமேஸ்வரி

[குடும்ப நல சேவையாளர், அக்கராயன்குளம்]

மலர்வு: 21-08-1959 உதிர்வு: 10-02-1988

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய், என்றும் சிரித்த முகத்துடன் எல்லோர்க்கும் நற்பணி செய்து எமையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி சென்றாயோ அவ்வுலகு. மீண்டும் பிறவி எடுத்து எம் குலத்திலே உதித்திடு.

உமது பிரிவால் துயருறும்
பெற்றோர், உடன்பிறந்தோர்,
அத்தான்மார் அண்ணி
உற்றார், உறவினர்.

(1902)


எமது நேற்றைய புதிய வெளியீடுகள்!

1. அர்ஜுன் ✶ பவ்யா ✶ ரவி

**'தந்தைமேல் ஆணை'**

2. மேஜர் சுந்தரராஜன் ✶ வசந்தா ✶ நாகேஷ்

**'ஆலயம்'**

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665


## நீத்தார் பட்டியல்

### திருமதி சீனி ஆச்சி சுப்பிரமணியம்

காரைநகர், வலந்தலை — இலகடியைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற மலாயன் பென்சனர் சின்னப்பொடி சுப்பிரமணியம் அவர்களின் பாரியாருமாகிய திருமதி சீனிஆச்சி சுப்பிரமணியம், 10-3-88 வியாழ கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற அரசரத்தினம் பாக்கியம் (மலேசியா), காலஞ்சென்ற சேரசத்தினம், துரைசிங்கம் (மலேசியா), காலஞ்சென்ற செல்வரத்தினம், இராசு (மலேசியா) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற செல்லையா(மலேசியா),மலர்விழி(மலேசியா), நவரத்தினம் (முன்னாள் சுகாதாரக் கந்தோர் பிரசம லிகிதர். ஊர்காவற்றுறை) சின்னத்துரை (மலேசியா) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவர் தகனக் கிரியைகள் 11-03-88 வெள்ளிக்கிழமை காலை சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்

தகவல்: செ நவரத்தினம்
இலகடி, காரைநகர்.

### திரு. நடராசா முத்துக்குமாரு

கொக்குவில் தலையாளியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நடராசா முத்துக்குமாரு 5/3/88இல் காலமானார். இவர் ஓய்வு பெற்ற இந்தியன் வங்கியின் பிரதமர் கணக்காளராகவும் சமாதான நீதவானுமாவார் அன்னார் செருடாவில் இராசம்மாவின் (ஆசிரியை தெல்லிப்பழை மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை இராசலிங்கத்தின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற நல்லம்மா செல்வரத்தினம், புஷ்பதேவி அழகரத்தினம், செல்லபாக்கியம் செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் 6/3/88இல் செருடாவில் குடும்ப மயானத்தில் நடைபெற்றன. இந்தத் தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்:-
இராசம்மா முத்துக்குமாரு.

1900.

### திரு. இளையதம்பி இரட்ணம்

**(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கண்டுக்குளியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளையதம்பி இரட்ணம், (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்) காலமானார். அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் தவமணிதேவி, ரவீந்திரன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம், தங்கம்மா பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆறுமுகராஜா, (சுங்கத் திணைக்களம்) வின் அன்பு மாமனும், கணேசன, யோகரட்ணம (இ.போ.ச.) ஆகியோரின்மைத்துனரும், தர்சனன், சுதர்சனன்,நிதர்ஷனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-3-88 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இல, 18 காட்டுக் கந்தோர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;-
க. யோகரத்தினம்

(2028)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 11-03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday, 11th March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org